

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், வாகைகுளம் மற்றும் பூதகுடி ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொதுமக்களுக்காக பனங்காடி கிராமத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் உடன் உள்ளார்.



முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க தமிழகமெங்கும் நடைபெறும் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாம் தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் மத்திய ஒன்றியம் கருவந்தா பகுதியில் நடைபெற்ற முகாமை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார். நிகழ்வில் தென்காசி தொகுதி பார்வையாளர் கலை கதிரவன், ஒன்றிய செயலாளர் சேக் முகமது, ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன், ஊராட்சி தலைவர் மற்றும் கிளை கழக வார்டு கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள், அரசு அதிகாரிகள் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேலைவாய்ப்பில் புதுச்சேரி மக்களைப் புறக்கணிக்கும்

# ஜிப்மர் நிர்வாகத்தைக் கண்டித்து 8-ஆம் தேதி தி.மு.க. போராட்டம்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா அறிவிப்பு!

புதுச்சேரி, ஆக. 6 - புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை :-



ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் நேரடி கட்டுப்பாட்டில் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனை இயங்குகிறது. ஏழை எளிய, நடுத்தர மக்களுக்கு தரமான மருத்துவம், இலவச மருந்துகள் போன்ற சேவைகளை பெறுவதற்கு புதுச்சேரி மட்டுமல்லாமல் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமானவர்கள் பயன்பெற்று வருகின்றனர். ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்களுடன் கடந்த காலங்களில் சிறப்பாக செயல்பட்டு வந்த ஜிப்மர் நிர்வாகம், தற்போதைய ஒன்றிய அரசின் ஆர்.எஸ்.எஸ். கொள்கைகளை பின்பற்ற தொடங்கியதன் காரணமாக மருத்துவ சேவையில் மிகப்பெரிய தொய்வை ஏற்படுத்தி தரமான சிகிச்சைகள் பெறுவதில் பல்வேறு தடைகள் ஏற்பட்டுள்ளது.

படிப்பு மற்றும் வேலை வாய்ப்பில் புதுச்சேரி மண்ணின் மைந்தர்கள் புறக்கணிக்கப்பட்டு, பிற மாநிலத்தவர்கள் பயன்பெறும் வகையில் திட்டம், இலவசமாக வழங்கப்பட்டு வந்த மருத்துவ சேவை தற்போது கட்டணமாக மாற்றி ஏழை, எளிய, நடுத்தர மக்களை விழிபிதுங்கி நிற்க செய்துள்ளது. 'சி' பிரிவில் எடுக்க வேண்டிய பணியாட்களை ஒப்பந்த முறையில் கொடுத்து லட்சக்கணக்கில் லஞ்சம் கொடுத்து வேலைக்கு சேரும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற, ஜிப்மரின் தன்னிச்சையான செயல்களால் பொது சுகாதாரம் மற்றும் வேலை வாய்ப்பில் புதுச்சேரி மக்கள், மருத்துவ சேவையில் பிற மாநில மக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதன் காரணமாக ஜிப்மர் நிர்வாகம் கொண்டு வந்த பயனாளர் சிகிச்சை கட்டண முறையை ரத்து செய்து மக்களின் சுகாதார உரிமையை மீட்டெடுக்க வலியுறுத்தியும், கட்டாய இந்தி திணிப்புகள் மற்றும் ஜிப்மர் நிர்வாக சீர்கேடுகளை கண்டித்தும் 2023-ஆம் ஆண்டு புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகம் பல கட்ட போராட்டங்களை முன்னெடுத்தது.

இதையடுத்து அப்போதைய ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் அவர்கள் ஜிப்மர் மருத்துவமனையில் ஆய்வு செய்து பாராசிட்டமால் போன்ற அவசிய தேவைக்கு உண்டான மாத்திரைகள் கூட நோயாளிகளுக்கு கொடுக்க இருப்பு இல்லை என்பதும், கட்டணம் பெற்று மருத்துவ சிகிச்சை நடைபெறுவதையும் உறுதி செய்தார். பின்னர் சிறிது காலம் கண்துடைப்புக்காக கட்டணம் இல்லாமல் சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது வழக்கம் போல் ஒவ்வொரு சிகிச்சைக்கு என்று கட்டணம் நிர்ணயித்து மருத்துவம் பார்க்கப்படுகிறது. அதுவும் ஒன்றிய அரசின் ஆயுஷ்மான் காப்பீட்டு திட்ட பயனாளிகளுக்கு மட்டும் மருத்துவமும், மருந்தும் இலவசமாக கொடுக்கப்படுகிறது. காப்பீடு இல்லாமல் வரும் ஏழை நோயாளிகளுக்கு வெளியில் மருந்து வாங்கிக் கொள்ள பரிந்துரை செய்யப்படுகிறது. பிரசவத்திற்கு வரும் பெண்கள் பெருமளவில் அலைக்கழிக்கப்படுகிறார்கள். மேலும் நோயாளிகள் மருந்துகள் வாங்க மணிக்கணக்கில் காத்திருந்து வாங்க வேண்டிய அவல நிலையும் உள்ளது. இந்நிலை முற்றிலும் மாற வேண்டும். மீண்டும் இலவச மருத்துவ சேவை சிறப்பாக தொடர வேண்டும் என்பது புதுச்சேரி மக்களின் விருப்பம்.

அதேபோல், ஜிப்மர் மருத்துவமனையில் பி.எஸ்சி. மற்றும் டிப்ளமோ முடித்தவர்களுக்கு செவிலியர் பணியிடம் புதுச்சேரி ஜிப்மரில் 446 இடங்களுக்கும், ஏனாம் ஜிப்மர் கிளையில் 8 இடங்களுக்கும் என 454 செவிலியர் பணியிடங்களுக்கு 22.07.2025 அன்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த வேலைவாய்ப்பில் புதுச்சேரி மண்ணின் மைந்தர்களை புறக்கணிப்பு செய்யும் விதமாக தன்னாட்சி பெற்ற ஜிப்மர் நிர்வாகம், காலிப்பணியிடங்களை நிரப்ப சுயமாக தேர்வுகளை நடத்த முடியாமல், டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையை வைத்து நுழைவுத் தேர்வு நடத்துவது இதுவே முதல் முறை. ஜிப்மர் தேர்வுகளை நடத்திய போது உள்ளூர் மக்கள் பல்வேறு பணியிடங்களில் நல்ல ஊதியத்துடன் பணியில் உள்ளனர். ஆனால், தற்போது செவிலியர் பணியிடங்களுக்கான தேர்வு மற்றும் குரூப் 'பி' &'சி' தேர்வுகளுக்கு புதுச்சேரி மக்களை புறக்கணிக்கும் வகையில் டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையின் மூலம் Common Recruitment Examination (CRE) என்ற தேசிய அளவிலான பொதுத்தேர்வுகளை நடத்தி புதுச்சேரியில் உள்ள வேலைவாய்ப்புகளை வெளிமாநிலத்தவர்களுக்கு அள்ளித்தரும் வாய்ப்பை கொல்லைப்புறமாக உருவாக்கியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. நாடு முழுவதும் உள்ள 19 எய்ம்ஸ் மருத்துவமனையில் இருந்தும் இந்த தேர்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பை தருகிறார்கள். இதனால் செவிலியர்கள் மற்றும் குரூப் பி & சி ஊழியர்கள் உள்ளூர் மொழி, கலாச்சாரம் தெரியாமல் மேலும் நோயாளிகளை அலைக்கழிக்கும் நிலை தான் ஏற்படும் சூழல் வரும். ஒன்றிய அரசின் ஊழியர்களுக்கு சிறப்பு வயது தளர்வு, காலிப்பணியிடங்கள் மற்றும் பொதுத் தேர்வுகளில் (இருமொழி) ஆங்கிலம் மற்றும் இந்திக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கும் சூழலை உருவாக்கியிருக்கிறார்கள். இது தமிழ் மற்றும் ஆங்கிலம் பயின்ற புதுச்சேரி இளைஞர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. மேலும் கடந்த ஆண்டு தேர்வு எழுதி காத்திருப்போர் பட்டியலில் உள்ள செவிலியர்களுக்கு இந்த வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படவில்லை. ஆனால் அதைச் செய்யாமல் ஜிப்மர் நிர்வாகம் விதிகளை மீறி தன்னிச்சையாக செயல்பட்டிருக்கிறது. இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கதாகும்.

கடந்த ஆண்டு ஜூனியர் மொழிபெயர்ப்பு அதிகாரி, தொழில் சிகிச்சை நிபுணர், மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர், நர்சிங் அதிகாரி உள்ளிட்ட 169 'பி' குரூப் பதவிகளுக்கும், டெக்னீசியன், மருந்தாளுநர், மருத்துவ உதவியாளர் உள்ளிட்ட 209 'சி' குரூப் பதவிகளுக்கான வேலைவாய்ப்புக்கான தேர்வை ஜிப்மர் நிர்வாகம் புதுச்சேரியில் நடத்திய நிலையில், தற்போது செவிலியர் பணிக்கான தேர்வை (Nursing Officer Recruitment Common Eligibility Test) எய்ம்ஸ் நடத்த வேண்டிய அவசியம் என்ன?. மண்ணின் மைந்தர்களை புறந்தள்ளி வட மாநிலத்தவர்களை தேர்வு செய்வதற்கான ஒன்றிய அரசின் கொள்கையை ஜிப்மர் திணிக்க முற்படுவது அம்பலமாகிறது. அதை ஒருபோதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

ஜிப்மர் மருத்துவமனையின் வளர்ச்சிக்கு புதுச்சேரி மாநிலம் தனது இடம், நீர், மின்சாரம் உள்ளிட்ட வளங்களை எல்லாம் வழங்கி பங்களிப்பை தொடர்ந்து சிறப்பாக வழங்கி வருகிறது. தற்போது கூட சேதுராப்பட்டு கரசூரில் தொழில் வளர்ச்சிக்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் இருந்து 150 ஏக்கர் ஜிப்மர் வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில், ஜிப்மர் நிர்வாகம் புதுச்சேரி மக்களின் நல்வாழ்வு மற்றும் வேலைவாய்ப்பில் அக்கறை காட்டாமல் மாற்றான் தாய் மனப்பான்மையுடன் செயல்படுவது மிகுந்த வேதனை அளிக்கிறது. ஜிப்மர் நிர்வாகம் மண்ணின் மைந்தர்களை பாதிக்கின்ற தன்னிச்சையான செயலை திரும்ப பெற வேண்டும். ஜிப்மர் நிர்வாக வேலை வாய்ப்பளிக்கும் தேர்வை ஜிப்மர் நிர்வாகமே நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது அறிவித்துள்ள செவிலியர் மற்றும் குரூப் பி & சி பணியிடங்கள், புதுச்சேரி மண்ணின் மைந்தர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு அளிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதனை செய்ய தவறும் பட்சத்தில் ஜிப்மர் நிர்வாகத்தை கண்டித்து புதுச்சேரி மக்கள் துணையோடு வருகிற 8-ஆம் தேதி மாபெரும் பெருந்திரள் மக்கள் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்கும் என்பதை எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

# கடலூர் மாநகராட்சியில் பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஆக. 6 - வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தலைமையில், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி பள்ளி மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டும் பணிக்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பழைய கட்டடம் பழமை மாறாமல் புனரமைத்து புதுப்பிக்கும் பணிக்கும், மஞ்சக்குப்பம் மைதானத்தில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிக்கும், மஞ்சக்குப்பம் புதிய ஆய்வு மாளிகை ஆகிய பணிகளுக்கு நேற்று முன்தினம் (4.8.2025) அடிக்கல் நாட்டினார்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,

முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் வசிக்கும் கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/திட்டங்களை அவர்கள் வசிக்கும் பகுதிக்கே சென்று வழங்கிடும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டத்தின் மூலம் மக்கள் வசிப்பிடம் அருகாமையிலேயே முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் உடல் நலத்தினை பேணும் வகையில் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள், மாற்றுத்திறன் கொண்டவர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆகியோர்களை இலக்காகக் கொண்டு உயர்மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து மாநிலத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறார்கள். மாவட்டத்தின் வளர்ச்சிக்கேற்ப பொதுமக்களின் தேவையினை அறிந்து வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, இன்றைய தினம் கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள பல்நோக்கு சுகாதார செவிலியர் பயிற்சிப் பள்ளியில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு என 150 மாணவிகள் பயின்று வருகின்றனர். இம்மாணவிகள் தற்காலிக இடத்தில் தங்கவைக்கப்பட்டு பயின்று வந்தனர். தற்போது ரூ.8.58 கோடி மதிப்பீட்டில் தரைதளம் 574.77 சதுர மீட்டர் பரப்பளவில் 6 தங்கும் அறைகள், காவல் அறை, சமையல் அறை, பொருட்கள் வைப்பறை, உணவு உண்ணும் அறை, கழிப்பறை வசதிகளுடனும், முதல் தளம் 565.61 சதுர மீட்டர் பரப்பளவில் 13 தங்கும் அறைகள், பல்நோக்கு அறை, கழிவறை வசதிகளுடனும், இரண்டாம் தளம் 565.61 சதுர மீட்டர் பரப்பளவில் 14 தங்கும் அறைகள், பொழுதுபோக்கு அறை, கழிவறை வசதிகளுடனும் 1726.99 சதுர அடி பரப்பளவில் செவிலியர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கடலூர் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கடந்த 1897 ஆம் ஆண்டு சுமார் 44,960 சதுர அடி அளவில் கட்டப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளை கடந்த பழமைவாய்ந்த கட்டடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. பழமையான கட்டடமானது அதன் தொன்மை மாறாமல் ரூ. 16.20 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட உள்ளன. இக்கட்டடத்தின் வெளிப்புற சுவர்களில் ஏற்பட்டுள்ள பழுதுகள், செங்கலில் ஏற்பட்ட சேதங்கள், அதே போன்று உட்புற சுவர்களில் ஏற்பட்டுள்ள விரிசல்கள், பூச்சுகளில் ஏற்பட்டுள்ள விரிசல்கள், தரைப் பகுதி மார்ஃபல் கல்லில் ஏற்பட்டுள்ள சேதங்கள், மெட்ராஸ் ரூபிங் மாடலில் கட்டப்பட்டுள்ள மேற்கூரைகள் முழுவதுமாக அகற்றப்பட்டு புதிய கூரைகள் அமைக்கவும், கட்டடத்தில் உள்ள கதவு, ஜன்னல்களை பழமை மாறாக புதியதாக ஏற்படுத்திடவும், மின்இணைப்புகளில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சீர்செய்திடல், புதிய மின் இணைப்புகள் முழுவதுமாக ஏற்படுத்துதல், கட்டடம் முழுவதும் புதிய வர்ணங்கள் பூசுதல் உள்ளிட்ட புனரமைப்பு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 21.02.2025 அன்று கடலூர் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவற்ற பணிகளை திறந்து வைத்துடன், மாவட்டத்தின் வளர்ச்சிக்காக 10 புதிய அறிவிப்புகளை வெளியிட்டார். மஞ்சக்குப்பம் மைதானம் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, மஞ்சக்குப்பம் மைதானப் பகுதியில் மக்கள் பயனடையும் வகையில் ரூ.14.15 கோடி மதிப்பீட்டில் 77 கடைகள், கன்வென்ஷன் சென்டர் மற்றும் பொதுமக்கள் நடை பயிற்சி மேற்கொள்ள மைதானப் பகுதியை சுற்றி நடைபாதைகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் மேம்படுத்தும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கடலூர் மஞ்சக்குப்பம் பகுதியில் உள்ள முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம் எதிரே ஆய்வு மாளிகை ரூ.6 கோடி மதிப்பீட்டில் தரை தளம் 605 சதுர மீட்டர் பரப்பளவிலும், முதல் தளம் 593 சதுர மீட்டர் பரப்பளவிலும், போர்டிக்கோ 62 சதுர மீட்டர் பரப்பளவிலும் என மொத்தம் 1260 சதுர மீட்டர் பரப்பளவில் ஒரு மிக முக்கிய நபர்கள் தங்கும் அறை, 6 முக்கிய நபர்கள் அறை, உணவு அருந்தும் அறை, கூட்டரங்கம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாநகராட்சி ஆணையாளர் மரு. எஸ்.அனு, மாமன்ற உறுப்பினர்கள், இணை இயக்குநர், மருத்துவ நலப்பணிகள் மரு. மணிமேகலை, முதல்வர், செவிலியர் பயிற்சி பள்ளி மரு.கண்ணன், செயற்பொறியாளர், மரபு கட்டடங்கள் தேவேந்திரன், செயற்பொறியாளர் (பொ.ப.து.) சிவசங்கர நாயகி, உதவி செயற்பொறியாளர்கள் பிரவீன் குமார், மோகன்ராஜ், அருள், உதவி பொறியாளர் காவிய நாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் நடைபெறும் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

சென்னை, ஆக.6- தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேற்று முன்தினம் (04.08.2025), பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செய்து, நினைவிடங்களில் நடைபெற்று வரும் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (04.08.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செய்தார். இதனைத் தொடர்ந்து, பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களில் நடைபெற்று வரும் பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில், நினைவுத் தூண், சிலை புதுப்பிக்கும் பணி, புல்வெளிகளை பராமரித்தல், உடைந்துள்ள பளிங்குக் கற்களை சீரமைத்தல், தரைகளில் மழைநீர் தேங்காத வண்ணம் சீர்செய்யும் பணி, அண்ணா வளைவு முகப்பினை தூய்மை செய்யும் பணி உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் கலைஞர் உலக அருங்காட்சியகத்தில் கலைஞர் நிழலோவியங்கள், உரிமை போராளி கலைஞர், அரசியல் கலை அறிஞர் கலைஞர், கலைஞரின் சிந்தனைச் சிதறல்கள், சரித்திர நாயகனின் சாதனைப் பயணம், கலைஞர் புத்தக விற்பனை நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் ஏறக்குறைய 65 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

இந்நிகழ்வின் போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) இரா.பாஸ்கரன், செயற்பொறியாளர் எஸ்.விஜய்ஆனந் தன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



நெல்லை மாநகர பகுதியான நெல்லை டவுன், சந்திப்பு பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் இருந்து திராவிட மாடல் ஆட்சியில், 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற அடிப்படையில் ஏழை, எளிய, மக்களின் நலன் கருதி நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பன்னோக்கு சிறப்பு மருத்துவமனைக்குச் செல்ல கட்டணமில்லா மகளிர் விடியல் சொகுசு பேருந்து சேவையை நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், எஸ்.வி.சுரேஷ், தர்மன், தினேஷ், பேச்சி பாண்டியன், விஜிலா சத்யானந்த், பிரான்சிஸ், டாக்டர் சங்கர், கந்தன், ஜூலியட் மேரி,கருப்பசாமி, சௌந்தர முத்துராஜ், அனிதா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



புதூர் சுப்புராஜ் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்து பார்வையிட்டார். வருவாய்த் துறை சார்பில் பயனாளிகளுக்கு சாதி சான்றிதழ் மற்றும் மின்வாரியத் துறை சார்பில் மின் இணைப்பில் பெயர் மாற்றம் மருத்துவத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகம் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், அன்புராஜன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.